# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 14.12.2018-ம் தேதி முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற அவசரக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.1)** இந்நகராட்சியில் 8வது மாநில மானிய உயர்நிலை கூட்டமர்வு கூட்டம் (8th SHPC) திட்டப்பணியின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு அத்தியாவசியமான கீழ்கண்ட பணிகள் செய்ய விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும் நிதி ஒதுக்கீடு செய்த தர கோரியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை –5, அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி பெற அங்கீகாரம் கோரப்படுகிறது.

| S.lNo. | Name of works | Estimate amount (Rs.in Lakhs) |
|---|---|---|
| 1 | Purchase of front end loader Vehicle 1 Nos. | 30.00 |
| | **Total** | **30.00** |

அ.கு. 1) அங்கீகாரம் வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கான திட்ட பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்கள் மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அங்கீகாரம் வழங்கலாம்.

3) மேற்படி திட்டத்தில் அரசுமான்ய நிதி ஒதுக்கீடு போக அரசு நிர்ணயம் செய்யும் நகராட்சி பங்களிப்பு தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம். திருத்திய வரவு செலவு திட்டம் 2018–19ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.316/2016/இ1

**பொருள் எண்.2)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21.03.2018ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் சொத்துவரி கேட்புக்கு ஏற்றவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் 14640 சொத்துவரி கேட்புகள் உள்ள நிலையில் தற்போது வரை 7552 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி இந்நகராட்சியில் கூடுதலாக 6304 குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து 6304 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.211.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.13277/2018/WS1 நாள்.03.07.2018ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. UIDSSMT Revolving Fund நிதியின் கீழ் வட்டியில்லா கடன் (Interest free loan) தொகை ரூ.215.87 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து கடிதம் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு. 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திருத்திய மதிப்பீடு தொகை ரூ.225.00 இலட்சத்தில் TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடன் தொகை ரூ.215.87 இலட்சம் ஆகும். மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1494/2018/இ1

**பொருள் எண்.03** இந்நகராட்சிக்குட்பட்ட கண்ணன் பூங்கா எதிரில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் 2018—19ன் கீழ் பணிகள் மேற்கூரை அமைத்தல் பணிக்கு திரு.வி.ஜெகதீசன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.31026/2018ல் நகராட்சி தரப்பில் ஆணையர் சார்பாக வழக்கில் ஆஜராகுவதற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/—ஐ வழங்ககோரி திரு.இ.பாலமுருகன் (Sp – GP) அவர்களுக்கு ரூ.15000/— வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி வழக்கு கட்டணம் ரூ.15000/—ஐ திரு.இ.பாலமுருகன் அவர்களுக்கு வழங்கியதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04** இந்நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ ஈப்பு வாகனம் TN73E-0138க்கு ஹாரன் ஒளி எழுப்புகள், ஹெட்லைட், நெம்பர் பிளேட், ரிலேஸ் கியர்கிட்டு, எலக்ட்ரிக்கல் ஓயரிங், புகைபோக்கி அடைப்பு நீக்குதல் மற்றும் இதர பழுதுபராமரிப்பு பணிக்கு மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.7000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.05** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் தினசரி பயன்படுத்தப்படும தளவாடபொருட்கள், சுண்ணாம்பு நீர்தூள் இருப்பு குறைவாக உள்ளதினால் பொதுசுகாதாரப் பணி பாதிக்கப்படுகின்றது. எனவே மேற்படி பொருட்கள் வாங்கி கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.75000/—க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** தளவாட பொருட்கள் மற்றும் சுண்ணாம்பு தூள் தினசரி பயன்படுத்தப்பட்டு வருவதினால் தற்போது டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மற்றும் பொங்கல் பெருநாள் முன்னிட்டு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.06** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள பொளிரோ ஈப்பு எண். TN73E-0138க்கு என்ற வாகனம் பழுது ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி இதனை உடனடியாக நீவர்த்தி செய்ய வேலூர் பொளிரோ ஈப்பு வாகனம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான ஜெயின் கார்ஸ் என்பவரிடம் நிவர்த்தி செய்து கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.30,000/—க்கு மன்றப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு. 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசிம் கருதி இந்நகராட்சியின் பொளிரோ ஈப்பு TN73E-0138 என்ற வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் வேலூர் ஜெயின் கார்ஸ்–ல் அனுமதி பெற்றமைக்கும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
ந.க.எண்.3803/2018/எச்1

**பொருள் எண்.07** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை முதல்நிலை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கைதள்ளு வண்டிகள் (Pushcart) 20 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதால் அதனை பழுதுநிவர்த்தி செய்திடும் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.5.30 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.08** இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடாக தாழ்வான பகுதிக.ல் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்தும் பணிக்கு ஓஸ், ரோப் கயிறு, கடப்பாறை, மண்வெட்டி, கத்தி போன்ற பொருட்கள் வாங்குவதற்கு ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.கே.மணி, ஒப்பந்ததாரர் | ரூ.47,500 |
| 2 | திரு. சதீஷ்குமார், இன்ஜினியரிங் ஒர்க்ஸ், வெல்டிங் ஒப்பந்ததாரர் | ரூ.49,950 |
| 3 | திரு.என்.எழிலன், ஒப்பந்ததாரர் | ரூ.50,800 |

**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் முன் அனுமதிபெற்று குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.கே.மணி ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.09** இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அமீன்பிரான் தர்கா தெரு மற்றும் கோட்டைத்தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்17.12.2018 அன்று காணொளி காட்சி மூலம் திறப்பு விழா செய்ய உள்ளதால் விழா ஏற்பாடுகள் மற்றும் சீரியல்செட், பிளாக்ஸ் மைக்செட், வாழைமரம் இதர தோரணங்கள் அமைத்திடும் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.45000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.10)** இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு அமீன்பிரான் தர்கா தெரு மற்றும் கோட்டைத்தெருவில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்17.12.2018 அன்று காணொளி காட்சி மூலம் திறப்பு விழா செய்ய உள்ளதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விழா ஏற்பாடுகள் மற்றும் சீரியல்செட், பிளாக்ஸ் மைக்செட், வாழைமரம் தோரணங்கள் அமைத்திடும் பணிகளுக்கு ஒப்பந்ததாரரிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.என்.எழிலன், ஒப்பந்ததாரர் | 44500 |
| 2 | திருமதி. பி.ஹயாதிபீ, | 45000 |
| 3 | திருவாளர். ராஜாராம் & Co | 45500 |

**அ.கு. 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகோரி குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.என்.எழிலன், ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஆற்காடு** **தனி அலுவலர்,**
**நாள்: 14.12.2018** **ஆற்காடு நகராட்சி.**